## வகுப்பு - 7 - பருவம் - 3 - வரலாறு

## 1. புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும்

**பயிற்சி வினாக்கள்**

1. ஆழ்வார்கள் மொத்தம் எத்தனை பேர் ______.

   (1) 2 (2) 64 (3) 12 (4) 21

2. விஷ்ணு சித்தர் என்று அழைக்கப்பட்டவர் ______.

   (1) பெரியாழ்வார் (2) திருமங்கை ஆழ்வார்

   (3) மதுரகவி ஆழ்வார் (4) ஆண்டாள்

3. கீழ்கண்ட நூல்களில் ஆண்டாளின் கவிதை நூல் ______.

   (1) நாலாயிரத் திவ்ய பிரபந்தம் (2) திருமறை

   (3) இராமசரிதமானஸ் (4) திருப்பாவை

4. மும்மூர்த்திகள் என்றழைக்கப்பட்டவர்கள் யார்?

   (1) ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் (2) ஆதிசங்கரர், அப்பர், இராமானுஜர்

   (3) சுந்தரர், ஆண்டாள், ஆதிசங்கரர் (4) ஆண்டாள், அப்பர், சுந்தரர்

5. பெரியபுராணத்தின் ஆசிரியர் ______.

   (1) நம்பியாண்டார் நம்பி (2) சேக்கிழார்

   (3) சங்கரர் (4) துளசிதாசர்

6. வேதாந்தப் பள்ளியின் அடிப்படை நூல் ______.

   (1) பிரம்ம சூத்திரம் (2) பைஜக் (3) பெரிய புராணம் (4) திருப்பாவை

7. தெலுங்கு தத்துவஞானி ______.

   (1) சூர்தாஸ் (2) துளிசதாசர் (3) கபீர் (4) வல்லபாச்சாரியார்

8. சுரவார்டி அமைப்பைத் தோற்றுவித்தவர் ______.

LIVEWORKSHEETS

(1) அமீர் குஸ்ரு (2) துக்காராம்

(3) அப்துல் - வகித் அபு நஜிப் (4) மொய்னுதீன் சிஸ்டி

9. ஆஜ்மீரில் உள்ள ஷரிப் தர்கா அமைந்துள்ள மாநிலம் ______.

(1) மகாராஷ்டிரா (2) ராஜஸ்தான்

(3) பீகார் (4) கோவர்தன் குன்று

10. குருநானக்கின் 550 வது பிறந்த நாளைச் சிறப்பிக்கும் வகையில் இந்திய அரசு ______ அமைத்து வருகிறது.

(1) தியான அறை (2) கப்பல் கட்டும் தளம்

(3) விமான நிலையம் (4) நடைபாதை

11. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) ஆதிசங்கரர் - விசிஷ்டாத்வைதம்

(2) பைஜக் - கபீர்

(3) இராமனுஜர் - அத்வைதம்

(4) நம்மாழ்வார் - நாச்சியார் திருமொழி

12. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) துவாரகா - ஆதிசங்கரர் மடம்

(2) ஆண்டாள் - நாயன்மார்கள்

(3) கபீர் - ஆழ்வார்கள்

(4) குருநானக் - விஷ்ணு சித்தர்

13. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) தென்கலை - காஞ்சிபுரம்

(2) மதுரகவி - சிருங்கேரி

(3) நம்மாழ்வார் - 4000 பாடல்கள்

LIVEWORKSHEETS

(4) வடகலை - திருவரங்கம்

14. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) கேஷ் - இரும்புக் காப்பு

(2) கன்கா - வெட்டப்படாத முடி

(3) கிர்பான் - குறுவாள்

(4) கடா - சிகைக்கோல்

15. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) சூர்தான் - பார்வை திறனற்றவர்

(2) நாதமுனி - பிரம்ம சூத்திரம்

(3) துக்காராம் - இராமசரித மானஸ்

(4) சுரவார்டி - மகாராஷ்டிரா

16. தவறான இணையைத் தேர்ந்தெடு.

(1) பாகல் - திருமுழுக்கு (இனிப்பு நீர்)

(2) ரவிதாசின் சீடர் - மீராபாய்

(3) லேனா - கபீரின் சீடர்

(4) துக்காராம் - அபங்கா

17. தவறான இணையைத் தேர்ந்தெடு.

(1) தர்ம சாலை - குருத்துவாரா

(2) கபீர் பாடல்கள் - போஜ்புரி + உருது

(3) பஜனை பாடல்கள் - மீராபாய்

(4) சிவனை வழிபடும் சைவர்கள் - ஆழ்வார்கள்

18. கூற்று (A): ஆதிசங்கரர் - அத்வைத தத்துவம், இராமானுஜர் - விசிஷ்டாத்வைத தத்துவம்

LIVEWORKSHEETS

கூற்று (B): கடவுளின் மீதான முழு பக்தியே மனிதனை வாழ்வின் இடர்பாடுகளிலிருந்து காத்து முக்தி அருளும் - சூபி இயக்கம்

(1) (A) மட்டும் சரி (2) (B) மட்டும் சரி

(3) (A) மற்றும் (B) சரி (4) (A) மற்றும் (B) தவறு

19. கூற்று (A): அறிவின் வழிப்பட ஞானமார்க்கம் மேலும் சடங்குகள், நற்செயல்கள் வழிப்படகர்மா மார்க்கம் இவை இரண்டையும் விட சிறந்தது பக்தி மார்க்கம் - பகவத் கீதை

கூற்று (B): இந்துக்களும் இஸ்லாமியரும் கடவுளை வெவ்வேறு பெயர்களில் அழைத்தாலும் இருப்பது ஒரேயொரு கடவுள் மட்டுமே - ஹரிதாசர்

(1) (A) மற்றும் (B) தவறு (2) (A) மற்றும் (B) சரி

(3) (A) மட்டும் சரி (4) (B) மட்டும் சரி

20. கூற்று (A): தொடக்ககால இஸ்லாம் சமயத்தின் உலகப்பற்றுதலுக்கு எதிராகத் தோன்றியதே சூபி தத்துவம்

கூற்று (B): தீவிர உணர்ச்சிவயப்பட்ட பக்தி, ஆழமான தியானம் மூலமே கடவுளை உணர முடியுமென சூபி கோட்பாடு மறுக்கிறது

(1) (A) மற்றும் (B) சரி (2) (B) மட்டும் தவறு

(3) (A) மற்றும் (B) தவறு (4) (B) மட்டும் தவறு

21. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (i) ராமானுஜர் | - | a. இராமாநந்தர் |
| (ii) கபீர் | - | b. நட்பு |
| (iii) இராமசரித மானஸ் | - | c. பீகார் |
| (iv) பிர்தௌசி அமைப்பு | - | d. வைணவச் சிந்தனையாளர் |

(1) (i) - a (ii) - b iii) - c iv) - d (2) (i) - c (ii) - d (iii) - a (iv) - b

(3) (i) - d (ii) - a (iii) - b (iv) - c (4) (i) - d (ii) - c (iii) - b (iv) - a

22. பொருத்துக.

LIVEWORKSHEETS

(i) சமஸ்கிருத வேத நூல் - (a) தென் கலை

(ii) திவ்ய பிரபந்தம் - (b) 1102 பத்தி

(iii) ஆதிசங்கரர் - (c) வடகலை

(iv) நம்மாழ்வார் - (d) பத்ரிநாத்

(1) (i) - c (ii) - a (iii) - d (iv) - b

(2) (i) - a (ii) - b (iii) - c (iv) - d

(3) (i) - a (ii) - d (iii) - c (iv) - b

(4) (i) - d (ii) - c (iii) - b (iv) - a

23. பொருத்துக.

(i) கோவில் நகரம் - (a) பந்தர்பூர்

(ii) சைதன்யதேவர் - (b) திருவில்லிபுத்தூர்

(iii) பாண்டு ரங்கா - (c) 1469

(iv) குருநானக் - (d) கிருஷ்ணன் வழிபாடு

(1) (i) - a (ii) - d (iii) - b (iv) - c

(2) (i) - b (ii) - d (iii) - a (iv) - c

(3) (i) - a (ii) - b (iii) - c (iv) - d

(4) (i) - c (ii) - d (iii) - a (iv) - b

24. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(1) பொய்கையாழ்வார்

(2) சேக்கிழார்

(3) பூதத்தாழ்வார்

(4) பேயாழ்வார்

25. விஷ்ணுவின் மீதும் அவர் இணையான லட்சுமியின் மீதும் இராமானுஜர் கொண்டிருந்த பக்திநெறி _______.

(1) ஸ்ரீவைஷ்வணவம்

(2) கிரந்தவளி

(3) ஞான மார்க்கம்

(4) இவற்றில் ஏதுமில்லை

26. சீக்கியர்களின் புனித நூல் _______.

(1) பைஜக்

(2) இராமசரிதமானஸ்

(3) உபநிடதங்கள்

(4) குரு கிரந்சாகிப்

LIVEWORKSHEETS

27. குருநானக் _______ இல் இயற்கை எய்தினார்

(1) 1500 (2) 1535 (3) 1537 (4) 1539

28. குரு கோவிந் சிங்கிற்க்குப் பின்னர் _______ குருவாகக் கருதப்பட்டது

(1) கிர்பான் (2) குரு கிரந் சாகிப் (3) கன்கா (4) கடா

29. நாயன்மார்கள் மொத்தம் _______.

(1) 50 (2) 60 (3) 63 (4) 64

30. ஆழ்வார்களில் உள்ள ஒரே பெண்பால் ஆழ்வார் _______.

(1) திருமங்கை ஆழ்வார் (2) ஆண்டாள்

(3) மதுரகவி (4) பேயாழ்வார்

31. ஆத்மாவானது பிரம்மத்துடன் கலந்த பின்னரும் தனக்கான அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்கிறது - இத்தத்துவத்தை கூறுவது _______.

(1) விசிஷ்டாத்வைதம் (2) பக்தி இயக்கம்

(3) அத்வைதம் (4) சூபியிஸம்

32. பக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பால் தனித்துவம் பெற்ற இரண்டு ஆழ்வார்கள் _______.

(1) பேயாழ்வார், மதுரகவி (2) நம்மாழ்வார், ஆண்டாள்

(3) பூதத்தாழ்வார், ஆண்டாள் (4) திருமங்கை ஆழ்வார், மதுரகவி

33. நம்மாழ்வாரின் பாடல்கள் _______.

(1) 5000 (2) 2000 (3) 4000 (4) 3000

34. நாதமுனி தொகுத்த நூல் _______.

(1) நாச்சியார் திருமொழி (2) திருப்பாவை

(3) பிரம்ம சூத்திரம் (4) நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

LIVEWORKSHEETS

35. ஞானத்தை பெறுவதன் வழியாக ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணையும் என்று கூறும் தத்துவம் ______.

(1) சிஸ்டி அமைப்பு

(2) அத்வைதம்

(3) சுரவார்டி அமைப்பு

(4) விசிஷ்டாத்வைதம்

LIVEWORKSHEETS